MENMATHI KOVAI TAMIL MANDRAM   INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8 / MAY 2026    E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# எரபகட கூட்டத்தின் வழிபாடுகளும் தொன்மங்களும் (கள ஆய்வு)

**பூபதி கு ப**

**முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்)**

**அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)**

**கோயம்புத்தூர் 18.**

Kpboopathi3@gmail.com

9361864071.

**நெறியாளர்**

**முனைவர் இ.சேனாவரையன்**

**இணைப்பேராசிரியர்**

**தமிழ் உயராய்வுத்துறை**

**அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)**

**கோயம்புத்தூர் 18.**

senavarayantamil@gacbe.ac.in

9486772491

MAY - JUNE

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

# The Worship Practices and Myths of the Erabakada Community

## (Field Study)

**Boopathi K P**
**Ph.D Scholer (Full Time)**
**Government Arts College (Autonomous) Coimbatore 18.**
**Kpboopathi3@gmail.com**
**9361864071.**

**Name and Designation of the Supervisor**
**Dr. E. Senavarayan**
**Associate Professor**
**Department of Tamil**
**Government Arts College (Autonomous) Coimbatore 18.**
**senavarayantamil@gacbe.ac.in**
**9486772491**

**The term Thonmam carries various meanings, including ancient tales and myths. Thonmai (Antiquity) is recognized as one of the literary aesthetic forms (*vanappu*) enumerated by the ancient grammarian Tolkappiyar. Myths (*Thonmams*) are conceptual constructs that have evolved and solidified over the passage of time. The term *Thonmam* specifically denotes the act of elucidating a concept by drawing upon ancient tales or myths. In our daily lives, numerous myths manifest as enigmatic narratives. Events and accounts that appear to be implausible or incredible often constitute such myths. Among tribal communities, myths frequently serve as the foundational basis for their caste identities; specifically, those myths that chronicle everything from the very origins of a caste to the lifestyle and customs of its members are termed "Caste Myths." These myths serve to define and articulate their specific ethnic and social structures. Based on field research, this article examines the ancient**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

**worship practices and myths of the Erapagada a specific clan within the *Pavala* community. This research paper provides a comprehensive exposition of the myths associated with the Erapagada or Pavala people—a distinct clan or lineage belonging to a Scheduled Caste community.**

**Key Words :**

**The Pavala kulam of Erapakada, Kunnipalayam, Karanur, Sathurappan (Bala Pattabhiramar), Kathiri Narasimha Perumal and Aayakuzhal Avala Bethannasamy.**

**முன்னுரை :**

தொன்மம் என்ற சொல் ஆனது பழங்கதை, புராணம் என பல பொருட்களை உடையதாக உள்ளது. தொன்மை ஆனது தொல்காப்பியர் குறிப்பிடும் வனப்புகளுள் ஒன்றாக உள்ளது. தொன்மங்கள் காலம் காலமாக உருவாக்கப்பட்டு இருகிவிட்ட கருத்து வடிவங்களாக உள்ளன. தொன்மம் என்ற சொல் ஆனது பழங்கதை [புராணம்] துணையாக கொண்டு ஒரு கருத்தினை விளக்குவதைக் குறிக்கும். நமது அன்றாட வாழ்வில் பல தொன்மங்கள் மர்மத் தொடர்களாக உள்ளன. நம்ப முடியாதது போல் தோன்றும் நிகழ்ச்சிகளும், செய்திகளும் தொன்மங்களாக உள்ளன. பழங்குடி மக்கள் இடையே காணப்படும் தொன்மங்கள் அவர்களின் சாதியத்தின் அடிப்படையாகவே கொண்டு அந்த சாதியின் தோற்றம் முதல் அவர்களின் வாழ்வியல் குறிக்கும் தொன்மங்களைச் சாதியத் தொன்மங்கள் என்கிறோம். அவர்களின் இன அமைப்பைக் குறித்து இந்த தொன்மங்கள் காணப்படுகின்றன.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

இக்கட்டுரையில் கள ஆய்வின் அடிப்படையில் எரபகட என்னும் பவள கூட்டத்தாரின் தொன்மையான வழிபாட்டு முறைகளையும் தொன்மங்களையும் ஆராய்வதாக உள்ளது.

**திறவுச் சொற்கள் :**

எரபகட என்னும் பவள குலம், குன்னிபாளையம், காரனூர், சாத்தூரப்பன் (பால பட்டாபிராமர்), கதிரி நரசிம்மர் பெருமாள் மற்றும் ஆயக்குழல் ஆவல பெத்தண்ணசாமி.

**தொல்குடி :**

விசயநகர பேரரசின் ஆட்சிக்காலத்தில் 15,16 ஆம் நூற்றாண்டுகளில் கிணற்றுப் பாசனத்தைக் கொண்டிருந்த விவசாயத்திற்குத் தேவையானப் பரியை மூட்டித் தருவது, போர்முனைகளுக்குத் தேவையானத் தோல்கருவிகளைத் தயாரிப்பது, செருப்பு தைப்பது எனப் பெரும்பாலும் தோல் பணிகளைச் செய்வதற்காக குடியமர்த்தப்பட்டவர்கள் ஆவர்.[1] கோயம்புத்தூரின் தென்பகுதியில் பீடம்பள்ளி அருகில் உள்ள நடுப்பள்ளி எனும் ஊரில் வாழ்ந்து வந்தவர்களே எரபகட என்னும் பவள குலமக்கள். இவர்கள் தற்போது அதிகப்படியாக வாழும் பகுதியாக அருகம்பாளையம் மற்றும் காரனூர் எனும் ஊர்கள் அறியப்படுகின்றது. சுதந்திரத்திற்கு முன்பு தொழில்முறைப் பயணமாக அன்றைய அருகம்பாளையம் தெற்கு வளவு பகுதியில் இருந்து குப்பன் குப்பி என்ற தம்பதிகள் தன்னுடைய ஒரே மகன்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

சின்னானையும் அழைத்துக் கொண்டு வடக்கு நோக்கி வருகின்றனர். வடக்கு நோக்கி வரும்பொழுது அன்னூரைத் தாண்டி தொட்டிபாளையம் என்ற ஊரை வந்தடைகின்றனர். அங்கு வயல்வெளிகளுக்கு அருகில் வேலை பார்த்துக் கொண்டிருந்த ஆறுக்குட்டி என்ற பண்ணயக்காரர், நீங்கள் யார்? என்று வினவ, தங்களுடைய நிலையை எடுத்துக் கூறிய குப்பி குப்பன் தம்பதியினரை தனக்கும் பண்ணையில் வேலை செய்ய ஆட்கள் தேவை என்பதால் நீங்கள் இங்கேயே தங்கி விடும்படி கேட்டுக் கேட்டுக்கொண்டதன் படியே அன்றைய காரனூர் பகுதியில் வந்து குடிபெயர்கின்றனர். சின்னானின் மகன்களாக பெரியகதிரான், சின்னகதிரான், பெத்தான் என்ற மூன்று மகன்கள் பிறக்கின்றனர் இவர்களே அன்றைய அருகம்பாளையத்தில் பூசாரி வகையறாவாகவும் இருந்துள்ளனர். இந்த மூன்று பேரும் காரனூரில் நிரந்தரமாக தங்கி பண்ணையம் பார்க்க முடிவு செய்தனர். அன்றைய அருகம்பாளையத்தில் குல தெய்வ வழிபாட்டின் போது ஏற்பட்ட சண்டையில் இதன் பிறகு எங்களுடைய வாரிசுகள் இங்கு குல தெய்வ வழிபாட்டிற்கு வர மாட்டார்கள் என்று சொல்லி விட்டு வந்ததாக கள ஆய்வின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளது.

## பெயரும் பொருளும் & மொழி

- **தமிழ் மொழியில் “ பவளர் ”** - வேளாண்மை தொழில் செய்வோர், (பவளகாரர்)[2]

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

- **தெலுங்கு மொழியில் " எரபகட " - எர** என்பது சிவப்பு நிற வண்ணத்தை வீடுகளில் பூசுவோர் மற்றும் அழகு, **பகட** என்பது தமிழ்நாட்டில் அருந்ததியர் சமூகத்தின் ஒரு பிரிவினராகவும், போர் வீரர்களாகவும் அறியப்படும் ஓர் இனக்குழுவினர் "பகடை" என்றும் அழைக்கப்படுகின்றனர்.[3]

- **கன்னட மொழியில் " கெஞ்சகான குட்டுறு "**.

எனப் பெயரும் தெலுங்கு கன்னட மொழிகளில் பொருளும் அறியப்படுகின்றன.

**தொழில்கள்**

இவர்களின் முக்கியத் தொழிலானக் கிணற்றுப் பாசனத்தைக் கொண்டிருந்த விவசாயத்திற்குத் தேவையானப் பரியை மூட்டித் தருவது, போர்முனைகளுக்குத் தேவையானத் தோல்கருவிகளைத் தயாரிப்பது, செருப்பு தைப்பது என பெரும்பாலும் தோல் பணியாளர்களாகவே அறியப்பட்ட இம்மக்கள், மின்சாரம் - பம்புசெட் - பிளாஸ்டிக் - ரப்பர்- என்று உருவான மாற்றங்களால் தங்களது பாரம்பரியத் தோல் தொழிலை இழந்து தாழ்வான நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

வரலாற்றின் ஒரு காலப்பகுதியில், இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் ஒரு மக்கள் குழுவினர் பலவந்தமாகவும், சமயக் கட்டுப்பாடுகள் மூலமாகவும் இத்தொழிலில் ஈடுபடுத்தப்பட்டனர். இதனடிப்படையில் இந்தியா முழுவதும் அருந்ததியருக்கு (சக்கிலியர்) இணையானச் சாதிகளைக் காணலாம்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

வட இந்தியாவின் சண்டாளன், பாங்கி போன்றவை உதாரணங்களாகும்.[4]

இவர்களின் முக்கிய தொழில் துப்புரவுப் பணியாளர்கள் என்ற படியால் கிராமப்புறங்களில் மற்ற தலித் பிரிவினராலேயே இவர்கள் ஒதுக்கப்படுகின்றனர்.

ஆடு மாடு மேய்த்தல், மாட்டிறைச்சி வியாபாரம், குத்தகை முறை விவசாயம், பல்வேறு விதமான குடிசைத்தொழில்கள், சிறு வணிகர்கள் மற்றும் பறையிசைக்கலைஞர்கள் போன்ற தொழில்கள் செய்துவருகின்றனர்.

இந்திய விடுதலைக்குப் பின் சட்டப்படி இவர்கள் பட்டியல் சமூகத்தவராக அறிவிக்கப்பட்டனர். அரசாங்கப் பணிகளிலும், அரசியல் பதவியிலும், மருத்துவர்களாகவும், வழக்கறிஞர்களாகவும், உயரத் தொடங்கயுள்ளனர்.

## குலதெய்வங்களும் வழிபாட்டு முறைகளும்

- ஆதிகால தெய்வம் - **சாத்தூரப்பன்** (**பாலபட்டாபிராமர்**)

சாத்தூரப்பன் என்கின்ற பெயர் விருதுநகர் மாவட்டம் சாத்தூர் தாலுகாவில் சாத்தூரில் உள்ள வெங்கடாசலபதியைக் குறிப்பிட பயன்படுத்தப்படுகிறது. இந்த தெய்வத்தையே தங்களுடைய குல தெய்வமாக வைத்து ஊரின் பெயரையே தெய்வத்திற்கு வைத்து சாத்தூரப்பன் என வழிபட்டு வந்தவர்கள் பின்னாளில் வைணவப் பட்டாச்சாரியர்களால் இந்த தெய்வத்திற்குப் பாலபட்டாபிராமர் என பெயரிட்டு வழிபடத் தொடங்கியுள்ளனர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

## வழிபாட்டு முறை

இந்த தெய்வமானது இன்றளவும் கோவை மாவட்டம் அருகம்பாளையம் கிராமத்தில் கோவில் நிர்மாணிக்கப்பட்டு இக்கோவிலில் நாயக்கர்கள் மற்றும் செட்டியார்களும் ராமர் கூட்டம் என்று தாங்களும் வரி செலுத்தி இன்றளவும் எரபகட என்னும் பவள குல பங்காளிகள் இந்த இறைவனை வழிபட்டு வருகின்றனர். இக்கோவிலில் முறை ஆகக்கூடிய மாமன் வழி உறவினர்கள் சுள்ளிகாரர் கூட்டம் என்ற குலத்தார் ஆவர். இவர்களே இந்த தெய்வத்திற்குத் திருவிழா காலங்களில் வரவேற்பு வழங்குதல் மற்றும் மத்தளம் அடித்தல் என்ற கட்டளை முறைகளை இன்றளவும் பின்பற்றி வருகின்றனர். இக்கோவிலில் பங்காளிகள் ஒன்றிணைந்து 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மரப்பெட்டியில் உள்ள இறைவனைக் கீழே இறக்கி திறந்து உள்ளிருக்கும் இறைவனை வழிபட்டு வருகின்றனர். அருகம்பாளையத்தில் பெட்டி திறந்து சாமி கும்பிடும் முறையில் அனைத்து பங்காளிகளும் இடம்பெற வேண்டும் என்பது கட்டாய முறையாக இருந்து வந்துள்ளது. இதன் வாயிலாக இவர்கள் ஒரு தொன்மையான ஒழுங்குமுறையை உருவாக்கியுள்ளனர் என்பதும் கள ஆய்வின் அடிப்படையில் கண்டறியப்பட்டுள்ளது.

- இடைக்கால தெய்வம் - **வீரமாத்தி அம்மன்**

அருகம்பாளையத்தில் வழிபாடு செய்து வந்த இறைவனை அப்படியே விட்டுவிட்டு காரனூரில் குடிபெயர்ந்த குறிப்பிட்ட பங்காளிகள் மட்டும் இடுகம்பாளையத்தில் கிணற்றில்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

கிடைத்த வீரமாத்தி அம்மன் என்ற தெய்வத்தை எடுத்து வந்த குறைந்தது 100 ஆண்டுகளாக வைத்து வழிபாடு செய்து வந்துள்ளனர். பிறகு, இந்த தெய்வத்திற்கு செய்யக்கூடிய சடங்கு முறைகளும் வழிபாட்டு முறைகளும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏற்பட்ட மோதல்களால் நிறுத்தி வைக்கப்பட்டு நூறாண்டுகளாக இக்கோவிலில் திருவிழாக்கள் நடைபெறாமல் தனியாக சன்னதி உருவாக்கி வழிபாடு மட்டும் நடந்து வருகிறது.

வீரமாத்தி , வீரமாஸ்தி என பல்வேறுபட்ட பெயர்களால் பல்வேறு சாதியினராலும் பல்வேறு இடங்களில் வணங்கப்படுகின்ற தெய்வமாக வீரமாத்தி அம்மன் உள்ளது.

**உதாரணமாக,**

வீரமாத்தியம்மன் தமிழ்நாட்டில், குறிப்பாக கொங்கு மண்டலப் பகுதியில் (கோவை, ஈரோடு, சேலம்) மிகவும் பிரசித்தி பெற்ற ஒரு காவல் தெய்வம் மற்றும் குலதெய்வம் ஆவார். இவர் வீரம், சக்தி மற்றும் காக்கும் தெய்வமாக வழிபடப்படுகிறார்.

**முக்கிய தகவல்கள்**

- **கோயில்கள்** : சென்னம்பாளையம், இலுப்பிலி, உப்புபாளையம் மற்றும் எட்டிமாணிக்கம்பட்டி போன்ற இடங்களில் பிரபலமான வீரமாத்தியம்மன் கோயில்கள் உள்ளன.
- **வழிபாடு** : ஆடி மாதம் மற்றும் சிறப்பான நாட்களில் அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் மற்றும் தீர்த்தம் எடுத்து வருதல் போன்றவை நடைபெறும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

- **சிறப்பு** : இக்கோயில்களில் கருப்பண்ணசாமி போன்ற காவல் தெய்வங்களும் உடனிருப்பது வழக்கம், ஆடுகள் பலியிடும் வழக்கமும் சில இடங்களில் உள்ளது.

பல்வேறு சமூகத்தினரால் குலதெய்வமாக வழிபடப்படும் இந்த அம்மன், பக்தர்களின் குறைகளை நீக்கி, நலம் அருளும் சக்தி வாய்ந்த தெய்வமாக நம்பப்படுகிறார்.

- தற்கால தெய்வம் - **கதிரி நரசிம்ம பெருமாள்** மற்றும் **ஆயக்குழல் ஆவல பெத்தண்ணசாமி**

மூங்கில்களை வெட்டி விற்கும் தொழில் செய்யச் சென்ற இடமான மலை அடிவாரப் பகுதியில் " **சம்பு வங்கை** " என்ற இடத்தில் நீர் வழிப்பாதையில் உணவு உண்ண அமர்ந்த எரபகட குல ஆண்களும் அவர்களின் மாமன்மார்களும் அமர்ந்து உணவு உண்ணும் போது எதிர் திசையில் ஒரு வயதான தம்பதிகள் நெற்றியில் திருநாமம் அணிந்த படி கோவிந்தா..! கோவிந்தா..! கோவிந்தா..! என்று சொன்ன படியே அந்த வயதான தம்பதிகளின் தலை மீது வைத்திருந்த திருநாமம் இடப்பட்ட பனையோலைப் பெட்டியை நீரில் விட முயலுவதைக் கண்ட எரபகட இன மக்கள், இது என்ன? என வினவ, தம்பதிகளில் மூதாட்டி இது என் அப்பாவின் குலதெய்வம் என்றும் வேட்டுவ நாயக்கர் என்ற சாதியினரில் ஒரே குலத்து மக்கள் வழிபட்டு வந்த தெய்வம் என்றும் அவர்கள் சரியாக இந்த தெய்வங்களை வழிபடத் தவறியதால் அவர்களுடைய 100 வீட்டு குடும்பங்களையும் அவர்களுடைய குலத்தையே அழித்து விட்டதென்றும்,

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

நான் இந்த வயதிலும் தினமும் விளக்கேற்றி வழிபட்டு வந்தேன். இனி என்னால் முடியாது என்று சொல்லி முடிக்க, அருகம்பாளையத்தில் குலதெய்வத்தை விட்டுவிட்டு வந்த நிலையிலுள்ள கூட்டத்தில் ஒருவர் இந்த தெய்வத்தை நாங்கள் எடுத்துச் சென்று வழிபடலாமா? என்று வினவ மூதாட்டி நான் இந்த பெட்டியை நீரோட்டத்தில் விடுகிறேன் நீரின் போக்கில் பெட்டி சென்றுவிட்டால் விட்டுவிடுங்கள். மாறாக பெட்டி நீரோட்டத்தை எதிர்த்து வந்தால் நீங்கள் இந்த தெய்வங்களை எடுத்துச் சென்று வழிபடுங்கள். இந்த தெய்வங்கள் உங்களைக் காக்கும், என்று சொல்ல உடனே சரி என இருபுறமும் கோவிந்தா..! கோவிந்தா..! கோவிந்தா..! என்று திருநாமம் முழங்கப் பெட்டியை நீரோட்டத்தில் விட பெட்டி நீரோட்டத்தை எதிர்த்து வரவே... எரபகட இன மக்கள் மகிழ்ச்சியோடு பெட்டியை எடுத்துக்கொண்டு ஊர் திரும்பப் புறப்பட்டனர். புறப்பட்டு வரும் வழியில் ஒரு சிறிய கிணற்றின் அருகில் ஓய்வெடுக்க அமர்ந்த நேரத்தில் திடீரென ஒருவருக்கு அருள் வரவே அவர் என்னை நீரோட்டத்தில் இருந்து எடுக்கும் போது ஒரு மைத்துனர் (மல்லகாரர்) இருந்துள்ளார் அவரை அழைத்து வந்து என்னைத் தூக்குங்கள் இல்லையேல் நான் உங்களுடன் வர மாட்டேன். இங்குள்ள கிணற்றில் தங்கி விடுவேன் என சொல்லி முடிக்க, அருள்வாக்கு சொன்னவர் சுயநினைவுக்கு திரும்பியுள்ளார். உடனே மைத்துனரை அழைத்து வர மீனம்பாளையத்திற்கு ஆட்களை அனுப்பி அழைத்து வரச்செய்து பூசை செய்து பெட்டியை எடுத்து வந்துள்ளனர். அந்த பெட்டியில் இரண்டு தெய்வங்கள் இருந்துள்ளன. அவை 1.கதிரி நரசிம்ம பெருமாள், 2.அக்னி நரசிம்ம பெருமாள் ஆகும்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

இந்த இரண்டு தெய்வங்களில் அக்னி நரசிம்ம பெருமாளை இராசடியைச் சேர்ந்த இராசகாரர் குலமக்கள் எடுத்துச் சென்று விட்டனர். பெட்டியிலிருந்த கதிரி நரசிம்ம பெருமாளை எரபகட குலமக்கள் எடுத்து வந்து குன்னிபாளையம் என்ற பகுதியில் வைத்து விழாக்கள் கொண்டாடி வழிபட்டு வருகின்றனர். குன்னிபாளையத்தில் உள்ள தெய்வம் **கதிரி நரசிம்ம பெருமாள் என்றும் காரனூரில் உள்ள தெய்வம் ஆயக்குழல் ஆவல பெத்தண்ணசாமி** என்றும் பெயரிட்டு அழைக்கின்றனர்.

## வழிபாட்டு முறை

கதிரி நரசிம்ம பெருமாள் - குன்னிபாளையம் இந்த, கோவிலில் கருவறையின் மேல் வலது பகுதில் பரண் அமைத்து வைக்கப்பட்டுள்ள பனை ஓலைப் பெட்டியில் உள்ள தெய்வத்தை இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கீழிறக்கி அலங்கரித்து வழிபட்டு வருகின்றனர். ஒரு குலத்தைச் சேர்ந்த தாயாதிகள் கைக்கோர்வையிட்டு இந்த குலத்திற்கு முறையான மாமன் முறையில் உள்ள மீனம்பாளையத்தைச் சேர்ந்த பொய்யேரி வேலன் வகையறா என்னும் “**மல்லகாரர்**” குலத்தைச் சேர்ந்த ஒருவர் இக்கூடையை இறக்கித் தந்து வழிபாட்டுச் சடங்குகளை முன் நின்று செய்கின்றார். இவரை “**அரை தாயாதி முழு சுட்டம்**” என்று அழைக்கின்றனர். இந்த இரு தெய்வங்களுக்கும் மல்லகாரர்களே அனைத்து சீர்களையும் செய்கின்ற உரிமை படைத்தவர்களாக இருக்கின்றனர். இந்தத் திருவிழாவானது கட்டாயமாக இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கார்த்திகைத்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

தீபத்திற்கு முன் இரு கோவில்களிலும் திருவிழாக்கள் நடைபெற்று வருவதை கள ஆய்வின் வழியாகக் கண்டறியப்பட்டுள்ளது. இப்படியாக, வெவ்வேறு காலக்கட்டங்களில் மூன்று வகையான தெய்வங்களைத் தங்களுடையக் குல தெய்வங்களாக எரபகட என்னும் பவள குலமக்கள் வழிபட்டு வந்துள்ளனர் என்பதைக் கள ஆய்வின் தரவுகளாகக் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், கதிரி என்பது தெலுங்கு மொழியில் ஆலமரம் என்பதாகும். ஹிரண்யகசிபுவை வதம் செய்த பின், நரசிம்மர் கதிரி (முள் முருங்கை) மரத்தின் வேரிலிருந்து வெளிப்பட்டதாகக் கூறப்படுகிறது.

- **அமைவிடம்** : ஆந்திராவின் அனந்தபூரில் இருந்து சுமார் 100 கி.மீ தொலைவில், கதிரி நகரில் அமைந்துள்ளது.

- **மூலவர்** : ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சுவாமி, எட்டுக் கைகளுடன் கூடிய உக்கிர ரூபம்

.

- **விழாக்கள்** : ஆண்டுதோறும் நடைபெறும் பிரம்மோற்சவம் மற்றும் ரத உற்சவம் மிகவும் பிரபலம்.

- **வரலாறு** : விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயர் மற்றும் சிவாஜி மகாராஜ் ஆகியோர் இத்தலத்திற்கு வந்து வழிபட்டுள்ளனர்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

**முடிவுரை** :

இந்த குலத்தைச் சேர்ந்த மக்கள் தற்போதைய சூழலில் ஆதியில் வழிபட்ட குலதெய்வத்தை **சாத்தூரப்பன்** (பாலபட்டாபிராமர்) என்னும் தெய்வத்தை வழிபட்டு வந்துள்ளனர். பிறகு, அங்கு ஏற்பட்ட பங்காளி தகராறுகளால் குலதெய்வத்தை அங்கேயே விட்டுவிட்டு பூசாரி வகையறாவைச் சேர்ந்தவர்கள் வடக்கே அன்னூர் அருகே உள்ள காரனூர் பகுதியில் குடி பெயர்ந்து புதிய குலதெய்வமாக வீரமாத்தி அம்மன் என்ற பெண் தெய்வத்தையும் வழிபட்டு வந்துள்ளனர். ஆனால் இந்த வீரமாத்தி அம்மன் தெய்வமானது நூறு ஆண்டுகளுக்கு மேலாக திருவிழாக்கள் நடத்தப்படாமல் வழிபாடு மட்டுமே செய்து வருகின்றனர். பிறகு தொழில்முறைப் பயணமாகச் சென்றவர்கள் எடுத்து வந்த பெட்டியில் இருந்த கதிரி நரசிம்ம பெருமாளை குலதெய்வமாக வைத்து குன்னிபாளையம் கிராமத்தில் வைத்தும், ஆயக்குல ஆவல பெத்தண்ணசாமியை காரனூரிலும் வைத்து ஒற்றுமையுடன் வழிபாடுகள் செய்து வருகின்றனர். இப்படியாக, வெவ்வேறு காலக்கட்டங்களில் மூன்று வகையானத் தெய்வங்களைத் தங்களுடைய குல தெய்வங்களாக எரபகட என்னும் பவள குலமக்கள் வழிபட்டு வந்துள்ளனர் என்பதை கள ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. தென்னிந்திய குலங்களுகளும் குடிகளும், தமிழ் மின் நூலகம், ப.எண் 53

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :8 /Issue 8/ MAY 2026 E-ISSN 3049-3676 (Online)

2. தென்னிந்திய குலங்களுகளும் குடிகளும், தமிழ் மின் நூலகம், ப.எண் 180

3. விக்கிப்பீடியா, அருந்ததியர் வரலாறு, இணையம்

4. விக்கிப்பீடியா, அருந்ததியர் வரலாறு, இணையம்

5. விக்கிப்பீடியா, கதிரி நரசிம்மர், இணையம்

**பார்வை நூல்**

1. தென்னிந்திய குலங்களுகளும் குடிகளும்

**எட்கர் தர்ஸ்டன்**

**<u>தமிழ்ப் பல்கலைக் கழகம் : தஞ்சாவூர்</u>**

**பதிப்பு ஆண்டு 2010**

**<u>தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு 72</u>**